RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s17

OPEN ACCESS

# தொடக்க காலத்திருச்சபை மக்களின் நம்பிக்கைகள்

ஆ மதுரைவீரன் [அ, *], குளோரியா வி. தாஸ் [அ]

[அ] கிறித்தவத் தமிழியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# The Belifes of Christians in the Early Church

A. Mathuraiveeran [a, *], Gloria V. Dhas [a]

[a] Department of Christian Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author:
churchdivineag@gmail.com

Received: 11-03-2021
Revised: 20-11-2021
Accepted: 24-11-2021
Published: 25-01-2022

Check for updates

**ABSTRACT**

The Early Christians had faith in the Lord Jesus Christ and followed various rituals to express their faith. Their beliefs system were based on the Teaching of the Lord Jesus Christ and their rituals were based on the Traditions that were imported to them by various spritual leaders. The one True God, The Deity of Lord, Jesus Christ, The fall of Man, Tha Salvation of Man, Intial Physical Evidance of the Baptism of the Holy Ghost, Santificatation, Jesus is coming again and Judgement are the most significant beliefs of Chirstians till date.

**Keywords:** Christianity, Glory, Santification, Judgement, Holy Spirit, Beliefs.

## முன்னுரை

மனிதச் சமூகம் வேட்டைச் சமூக நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று நாகரிக சமூக நிலையை அடைந்த பின்னரும் வேட்டைச் சமூக நிலையில் அவர்களது செயல்பாடுகள் போலச் செய்தல் மூலம் கலையாகவும் சில செயல்பாடுகள் மீண்டும் மீண்டும் செய்யப்பட்டதால் சடங்காகவும் பின்பற்றப்பட்டன. வேட்டையின் போது விலங்குகள் நிறைய கிடைக்க வேண்டும் என்பதற்கான மந்திரங்கள், சடங்குகள் முதலியவற்றைச் செய்தனர். விலங்குகள் ஓடுவது போலவும் அவற்றைப் பிடிப்பது போலவும் நடித்தனர். அவையே பின்னர் சடங்குகளாகவும் நம்பிக்கைகளாகவும் எஞ்சின என மானிடவியலார் கருதுகின்றனர். வேட்டையின் போது விலங்குகளை கொல்வதற்கு குறிப்பிட்ட செயல்களை தொடர்ந்து செய்து வந்தனர். அச்செயல்கள் பின்னர் சடங்குகளாக வளர்ச்சி பெற்றன. இதைச் செய்தால் இவ்வாறு நடக்கும் என்னும் நம்பிக்கையும் அவர்களிடம் காணப்பட்டது. நாகரிக சமூகத்திலும் இவ்வாறான நம்பிக்கைகள் பழமையான சமூகத்திடமிருந்து கடத்தப்பட்டு கடைபிடிக்கப்படுவதைக் காணலாம். மனிதச் சமூகங்கள் பல்வேறு சூழல்களில் பல்வேறு நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும், சமய வழிபாட்டு முறைகளையும் கொண்டிருப்பர். இந்தியாவில் பழமையான முழுமுதற் கடவுளைக் கொண்ட சமயங்களாக சைவம், வைணவம் ஆகியன காணப்படுகின்றன. இது போல் அரபு நாடுகளில் இஸ்லாமும், மேற்காசிய நாடுகளில் கிறித்தவமும் தோன்றி மக்களிடையே பரவின. ஒவ்வொரு சமயத்திற்கும் அச்சமயம் சார்ந்த நம்பிக்கைகள் காணப்படுவது இயல்பாகும். தொடக்க கால அல்லது இயேசு கிறிஸ்துவின் காலத்தில் நிலைபெற்றிருந்த சமயமானது மக்களிடையே பரவி வளர்ச்சி பெறத் தொடங்கியிருந்தது. யூதர்களிடையே பரவிய கிறித்தவ சமயமானது அவர்களைக் கிறித்தவர்களாக மாற்றியது. இயேசுவின் காலத்தில் அவரால் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் அம்மக்கள் சில

நம்பிக்கைகளை கடைபிடித்து வந்தனர். இப்போது வரையிலும் அத்தகைய நம்பிக்கைகள் கிறித்தவர்களிடம் காணப்படுகின்றன. அந்நம்பிக்கைகளில் சிலவற்றை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

## நம்பிக்கைகள்

ஒவ்வொரு சமூகக் குழுவினரும் தமக்கான வாழ்வியல் செயல்பாடுகளைக் கொண்டிருப்பர். உணவு தேடுதல், பாலியல் செயல்பாடுகள், திருமண முறைகள், வழிபாட்டு முறைகள், சடங்கு நிகழ்த்துதல் என்பன போன்றவற்றில் சில மீவியற் ஆற்றல்கள் மீதான நம்பிக்கைகளையும் கொண்டிருப்பர். அந்நம்பிக்கைகள் அவர்களிடம் தொடர்ந்து காணப்படும். இத்தகைய நம்பிக்கைகளும் மக்களின் வாழ்வியலை முன்னகர்த்திச் செல்லக் கூடியதாக இருக்கும் எனலாம். "மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகிறது. இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற கருத்தேற்றத்தின் அடிப்படையில் அவை தோன்றியனவாகவே காட்சி தருகின்றன. அச்சத்தின் காரணமாக மனிதன் இயற்கையின் தோற்றத்தினையும் செயற்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புக்களோடு இயைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன" என்னும் கருத்தானது நம்பிக்கைகள் மனிதர்களிடம் தோன்றிய விதத்தினைக் கூறுவதாக அமைகிறது (Gandhi, 2008). இது போன்ற நம்பிக்கைகள் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றன. கிறித்தவர்களிடம் இயேசுவின் தெய்வீகத் தன்மை, இயேசுவின் மறுவருகை, உலகின் கடைசி கால நிகழ்வுகள் போன்றவற்றைக் குறித்த நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

## ஒரே மெய்யான கடவுள்

தொடக்கக் காலத் திருச்சபை கடவுள் உண்டு என்று உறுதியாக நம்பியது. நித்தியமாய் இருக்கிற அவர் தம்மை - தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூன்று ஆள் தத்துவங்களில் விளங்கப் பண்ணுகிறார் என்றும் நம்பியது (Douglas Alban, 2014). யூதர் இஸ்லாமியர், கிறித்தவர்கள் ஒரே கடவுள் உண்டு என்று நம்புகின்றனர். கடவுள் ஒருவர் உண்டு என தூய விவிலியம் உரைக்கிறது. கடவுள் ஒருவர் உண்டு என்பதை விவிலியம் நிரூபிக்க முயற்சிக்கவில்லை, காரணம் அவர் இருக்கிறவராகவே இருக்கிறபடியால் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. எனவேதான் தொடக்கநூல் 1:1-ல் 'தொடக்கத்திலே கடவுள்' என்று விவிலியம் ஆரம்பிக்கிறது. கடவுள் ஆவியாயிருக்கிறார் மனிதர்களுக்கு காட்சி தருவதற்காக அவர் சில வேளைகளில் மனித உருவில் காட்சியளிக்கிறார்.. பழைய ஏற்பாட்டில் பலர் அவரை தரிசித்தாலும், அவருடைய முழு அளவையும் காணவில்லை. அவருடைய மகிமையின் ஒரு பகுதியைக் கண்டார்கள் (விப. 33:20). அவர் மனிதத்துவம் உடையவர். கடவுள் ஆவியாயிருக்கிறார் என்பதால் மனிதத்துவம் உடையவர் அல்ல என்பது பொருளல்ல. அவருக்கு நம்மைப் போல உடல் இல்லாவிடினும் மனிதத் தன்மையுடையவராகவே இருக்கிறார். கடவுள் பேசுகிறார், பார்க்கிறார், கேட்கிறார், நடக்கிறார், ஆளுகை செய்கிறார், பாதுகாக்கிறார், இரட்சிக்கிறார், குணமாக்குகிறார், கொடுக்கிறார், நியாயந்தீர்க்கிறார்.

## இயேசு கிறித்துவின் தெய்வீகத்தன்மை

இயேசு கிறிஸ்து நித்தியமானவர். அவர் தொடக்கத்திலே கடவுளோடிருந்தார். அவர் கடவுளாயிருந்தார் (யோவா. 1:1). உலக படைப்புக்கு முன்னமே இருந்தார். எனவே லோகாஸ் என்று அழைக்கப்படுகிறார் (யோவா. 1:1,14; தி.வெ. 19:13). லோகாஸ் என்பதற்கு 'வார்த்தை' என்பது பொருள். கடவுள் தம்மை உலகுக்கு வெளிப்படுத்த பல்வேறு வழிகளை கையாண்டார். அவருடைய வெளிப்பாட்டின் உச்சகட்டம் இயேசுகிறிஸ்து. பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய தூதன் என்னும் நிலைமையில் ஆகாருக்கு தரிசனமாகி சாராளிடத்தில் திரும்பிப் போகும்படி சொன்னதுடன் அவளின் சந்ததி ஆசீர்வதிக்கப்படும் என்றும் கூறினார் (தொ.நூ. 16:7-14). நித்தியத்திலும் மானிட அவதாரத்திற்கு முன்பும் இருந்த (வியாபித்திருந்த) கிறிஸ்து மானிட அவதாரமானார். யோவா. 1:14 "அந்த வார்த்தை மாம்சமாகி." (கலா. 4:5; உரோ. 8:3; பிலி. 2:6,7; எபி. 2:14; மத். 1:2 அதிகாரங்கள்; லூக். 1,2 அதிகாரங்கள்

கொலோ. 1:15). கடவுள் முற்பிதாக்களுக்கு கொடுத்திருந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றவும் புறஜாதிகளுக்கு இரக்கம் கிடைப்பதற்காகவும் வந்தார் (உரோ. 9:8,9). ஆதி. 3:15ல் முதல் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டு பலி முறைகள், ஆசரிப்புக் கூடாரம் இவைகளெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பனையாக உள்ளன (எசா. 5:2; 7:14; 9:6; தி.பா. 7:8; 16:8-10; 22:1; 49:9-11.) அவர் மரணமடையும் போது மனிதனுக்காக, மனித சார்பில் மரணமடைந்தார். உலக மீட்பராக மாறினார். சபையின் மூலைக்கல்லானார். (மத். 16:18,21; தி.ப. 20:28; எபே. 2:20; 5:25-27).

இயேசு கிறிஸ்துவில் மானிடத் தன்மையும், கடவுளின் தன்மையும் நூற்றுக்கு நூறு காணப்பட்டன (கலா. 4:5, லூக். 1:30-38; 2:1-20). அவர் கன்னி மரியாளிடத்தில் பிறந்தார். இயேசு தன்னை ஒரு மனிதன் என்று அழைத்தார். அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடும் தன்னை மனிதனைப் போல காண்பித்தார் (யோவா. 20:15). இன்றைக்கு மகிமையில் ஒரு மனிதனாக வீற்றிருக்கிறார் (1திமொ. 2:5). அவர் மறுபடியும் வரும்போது மனிதனைப் போல் வருவார். (மத். 16:27, 28; 25:31). உலகத்தை நீதியோடு நியாயந்தீர்க்கும் போதும் மனிதனைப் போலிருப்பார் (தி.ப. 17:31). அவருடைய இடத்தில் யாரும் வரமுடியாது. அவரது பிறப்பில் தூய ஆவியால் உற்பத்தியானார் (மத். 1:20, 21; லூக். 1:35). அவர் 12 வயது நிரம்பியபோதே கடவுளின் மைந்தன் என்ற உணர்வு அவருக்கு இருந்தது (லூக். 2:49). கிறிஸ்துவில் காணப்பட்ட இரு தன்மைகளும் கிறிஸ்துவாகிய ஒரே ஆளில் நூற்றுக்கு நூறு காணப்பட்டது. இது மனிதரால் விளங்க முடியாத இரகசியமாகும் (கொலோ. 2:2,3).

## மனிதனின் பாவம்

“மனிதன் அன்புடனும், சுயாதீனத்துடனும் கடவுளை சேவிக்கத் தெரிந்து கொண்டு அவனுடைய பண்பில் வளர வேண்டும் என்பதற்காக அது ஒரு சோதனையாயிருந்தது. சோதனை பாவமல்ல, மனிதன் தானாகவே தெரிந்தெடுப்பதற்குரிய சித்த சுயாதீனத்தை கடவுள் அவனுக்கு கொடுத்திருந்தார். இல்லாவிட்டால் மனிதன் ஒரு எந்திரம்போல் இருப்பான். அறிவியல் உலகில் எந்திர மனிதன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான். இவனுக்கு அல்லது அதற்கு சித்த சுயாதீனம் கிடையாது.” (Zaharia, 2004). மனிதன் இயற்கைக்கு முரணாக செயல்படுவதே பாவமாகும். விவிலியத்தில் இறைவனுக்கு எதிராக நிற்பது பாவமெனப்படுகிறது. ஆதாம் ஏவாளின் முதற்பாவம் கடவுளின் கட்டளையை ஏற்காமல் மீறியதாகும். இது போல் மனித சமுதாயத்தினுள் குற்றச் செயல்கள், சீர்கேடுகள் ஆகிய விளைவுகள் வந்துள்ளன. ஆனால் பாவத்திற்குரிய தண்டனை முழுமையாக மனிதன்மேல் எதிர்காலத்தில் வரக்காத்திருக்கின்றன. பாவத்தினால் வரும் தண்டனை மரணமே. ஆனால் அது மூன்று வகைப்படும்.

1. உடல் மரணம் (Physical Death) ஆன்மா உடலை விட்டு பிரிக்கப்படுகிறது. இது பாவத்தினால் வந்த விளைவுகளில் ஒன்று (தொ.நூ. 2:17; 3:19; 1தெச. 4:13,14).
2. ஆவிக்குரிய மரணம் (Spiritual Death) மனித ஆன்மா கடவுளிடமிருந்து தற்காலிகமாக பிரிக்கப்படுகிறது (தொ.நூ. 2:17, உரோ. 5:21; எபே. 2:1,5).
3. நித்திய மரணம் (Eternal Death) நிரந்தரமாக ஒரு ஆத்துமா கடவுளை விட்டு பிரிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவதைக் குறிக்கிறது. (மத். 25:41; 10:28; 2தெச. 1:9,10; எபி. 10:31; தி.வெ.14:11).

## மனிதனின் மீட்பு

மனிதர் தங்கள் அக்கிரமங்களை விட்டு கடவுளண்டை திரும்புதலை மீட்பு என்று விவிலியம் கூறுகிறது. (எசா. 31:6; 59:20; எசே. 14:6; 18:32; 39:9-11; மத். 19:3; எபி. 6:1). மீட்பில் இரண்டு காரியங்கள் அடங்கியுள்ளது. 1. மனந்திரும்புதல் 2. நம்பிக்கை - எந்த ஒரு மனிதனும் தன்னைத்தானே மீட்க முடியாது. கடவுள் ஒருவரே அதை அவனுக்காகச் செய்ய முடியும். ஒரு மனிதன் தன் அக்கிரமங்களை இயேசுவிடத்தில் மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தினால் தன் பாவங்கள் கழுவப்பட்டு மன்னிக்கப்பட்டது என நிச்சயம் பெறும்போதே அவன் மீட்பை அடைகிறான். உள்ளத்தில் இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. கீழ்க்காணும் 4 காரியங்கள் ஒரு மனிதன் பாவத்தை அக்கிரமங்களை விட்டு மனந்திரும்பி மீட்பைப் பெற வழி வகுக்கும்.

1. நற்செய்திச் சொற்பொழிவு (மத். 12:41; லூக். 24:47; 2திமொ. 2:25,26)
2. கடவுள் தமது படைப்பின் மேல் காண்பிக்கும் நன்மைகள் (கிருபை, தயவு) (2பேதுரு 3:8,9; உரோ. 2:4).
3. கடவுளின் தண்டனை (தி.வெ. 3:19; எபி. 12:10,11)
4. கடவுளின் வார்த்தையின்மேல் உள்ள நம்பிக்கை (யோனா 3:5)

## கடவுளைக் குறித்த புதிய தரிசனம் (யோபு 42:5,6)

இயேசுவே என் பாவத்திற்காக சிலுவையில் அடிக்கப்பட்டு மரணமடைந்த உலக மீட்பர் என நம்பி, இயேசுவை சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவத்தை அக்கிரமத்தை விட்டு விலகி வாழத் தீர்மானம் எடுப்பதே ஒரு மனிதனுக்கு மீட்பைக் கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் அவன் உள்ளத்தில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. கிறித்தவத்தை ஏற்றுக் கொண்டவன் இயேசுவைத் தன் சொந்தக் கடவுளாக ஏற்றுக்கொள்வதன் மூலமாக அவரே மீட்பர் என்று நம்புகிறான். மனிதனுடைய மனத்தில் புத்தியில், உணர்ச்சியில் ஏற்படும் செயலே நம்பிக்கையாகும். ஒரு மனிதன் மீட்படைய மனதால் நம்ப வேண்டும் (உரோ. 10:9,10). மனிதனுடைய மனதிலிருந்து சிந்தனை (சக. 4:13; தானி. 2:30) சித்தம், உணர்ச்சி புறப்படுகின்றன.

## தூய ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றதற்கான ஆரம்ப சரிர அடையாளம்

திருத்தூதர் பணிகள் 2:4ம் வசனத்தில் "அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்" (திப. 2:4) என விவிலியம் இயம்புகிறது. தூய ஆவியின் அருட்பொழிவினைப் பெற்ற ஒருவனுக்கு வெவ்வேறான மொழிகளை பேசக்கூடிய சிலாக்கியத்தை தூய ஆவியானவர் கொடுக்கிறார். ஒருவர் தூய ஆவியின் அருட்பொழிவை பெற்றதற்கான அடையாளம் வெவ்வேறான மொழிகளைப் பேசுவதேயாகும் (William & Horton, 2015). பிறப்பிலேயே தூய ஆவியால் உருவாக்கப்பட்டிருந்த இயேசு ஊழியத்தை நிறைவேற்ற தூய ஆவியால் அருட்பொழிவுப் பண்ணப்பட்டார் (மத். 3ம் அதி). இயேசுவை கருத்தரித்தபோது மரியாள் மேல் தூய ஆவி வந்திறங்கினார். திருமுழுக்கின் போது இயேசுவின் மேல் தூய ஆவி வந்திறங்கினார். பழைய ஏற்பாட்டு காலத்திலுள்ள தீர்க்கதரிசி, ஆசாரியன், இராஜா ஆகிய மூன்று ஊழியங்களையும் ஒருங்கே நிறைவேற்ற கிறிஸ்து தூய ஆவியால் அருட்பொழிவைப் பெற்றார் (Zaharia, 2004).

## பரிசுத்தமாகுதல்

"பரிசுத்தமாகுதல்" என்ற வார்த்தையின் பொருள் யாதெனில் "பிரித்தெடுக்கப்படுதல்" என்பதாகும். நாம் நாளுக்கு நாள் பாவத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் நம் சுய வாழ்க்கையிலிருந்தும் பிரித்தெடுக்கப்படும் கிரியையே பரிசுத்தமாகுதலாகும். ஒரு நம்பிக்கையாளர் இயேசுவை சொந்தக் கடவுளாக ஏற்றுக்கொண்ட பின் அவரது வாழ்வில் தொடர்ந்தேர்ச்சியாக ஏற்படும் வளர்ச்சியைக் குறிக்கிறது. (Zaharia poonan, 1991). இது ஒரு கிறித்தவ ஓட்டப் பந்தயமாகும்! இந்த ஓட்டப்பந்தயத்தில் நம் எல்லாருக்கும் முன்பாக இயேசுகிறிஸ்து ஓடி முடித்தார். இப்போது நம் கண்களை நமக்கு முன்னோடியாய் ஓடிய இயேசுவின் மீது பதித்து நாமும் அதே ஓட்டத்தை ஓடும்படி புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம் (எபி. 12:1,2).

நாம் அறிந்து பாவம் செய்வதை நிறுத்தி விடுவதே இவ்வோட்டத்தின் முதற்படியாகும். நியாயப் பிரமாணத்தின் கீழ் "பாவம் செய்வதை நிறுத்தும்படியாக" எவ்விதப் புத்திமதியும் சொல்லப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையிலோ, இரு பக்கங்களையுடைய நற்செய்தி செய்தியாக (1) ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை (2) பாவத்தை விட்டோய்ந்திருத்தல் என்ற இயேசுவின் செய்தியை எல்லாத் திருத்தூதர்களும் அங்கிகரித்தார்கள். பவுல் கூறுகையில், "நீங்கள் பாவஞ் செய்யாதீர்கள்" (1கொரி. 15:34) எனவும்; யோவான் கூறுகையில், "என் பிள்ளைகளே, நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டும் என

இதை நான் உங்களுக்கு எழுதுகிறேன்” (1 யோவா. 2:1) எனவும், பேதுரு கூறுகையில், “பாவங்களை விட்டு ஓய்ந்திருங்கள்” (1பேது. 4:2) எனவும் கூறினார்கள் (Aruldoss, 1998).

## கடவுள் தரும் மகிழ்ச்சி

வியாதியும், மரணமும் தொடக்க மனிதனின் பாவத்தின் விளைவாக மனிதன் அனுபவிக்கும்படியாக கடந்து வந்தது. ஏதேன் தோட்டத்தில் ஏற்பட்ட பாவத்தின் மூலமாக இந்த பயங்கர விளைவு மனிதனுக்குள் வந்தது (உரோ. 5:12). மரணமானது மனிதனுக்கு கிடைத்திருக்கிற சாபமே என்பதை விவிலியம் தெளிவாக எடுத்துரைக்கிறது (தொ.நூ. 3:19; நீதி. 11:19; யாக். 1:15). நான் எகிப்தியருக்கு வரச்செய்த கொள்ளை நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன் என விவிலியத்தில் தம் மக்களுக்கு கடவுள் வாக்குப் பண்ணியிருக்கிறார் (விப. 15:26). கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில் பவுல் எழுதும்போது, ”சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும்” என்கிறார் (Aruldoss, 1998). அதே வேளையில் எல்லா வியாதிகளும், எல்லா மரணமும் பாவத்தின் விளைவின் மூலமாகவே வருகிறது எனச் சொல்லமுடியாது. வயது மூப்பு, கடின உழைப்பு, மதுபானம் மற்றும் தட்பவெப்பநிலை மூலமாகவும், மனிதனுக்கு வியாதி வருகிறது. அதன் மூலமாக மரணம் ஏற்படுகிறது. பிசாசானவனே வியாதிக்கும் மரணத்திற்கும் அதிகாரியாயிருக்கிறான். தர்மசங்கடமான சூழல்கள் மனிதனுக்கு வரும்போது கடவுளைக் குற்றப்படுத்தக் கூடாது. சாத்தானே எல்லா தீமையான சூழலுக்கும் காரணமாயிருக்கிறான்.

இங்கே மனிதன் அக்கிரமத்தில் வீழ்ந்து வியாதியாயிருக்கும் போது கடவுள் சுகமாக்குவரா? என்ற கேள்வி எழும்புகிறது. கடவுளின் குணங்களில் ஒன்று வியாதிகளை குணமாக்குவது என விவிலியம் கூறுகிறது (விப. 15:26). மேலும் கடவுளே மிகப்பெரிய மருத்துவர் என்றும் எரேமியா தன் இறைவாக்கினர் நூலில் எழுதியுள்ளார் கடவுள் தம் மக்களை எப்பொழுதும் குணமாக்குகிற வராயிருக்கிறார். திபா. 103:3-ல் உன் எல்லா அக்கிரமங்களையும் நீக்கி உன் வியாதிகளை குணமாக்குகிறார் என்று பக்தன் தாவீது விளம்புகிறார். கடவுளால் குணமாக்க முடியாத வியாதி என்று ஒன்றுமில்லை. சாத்தான் மூலமாக வியாதி வந்திருக்குமானால் சாத்தானின் வல்லமைகளை வேரோடு அறுத்து தம் மக்களை விடுவிக்கிறார்.

## மேலுலக நம்பிக்கை

இயேசு சிலுவையில் வெற்றி சிறக்கும் வரையிலும் முழு மனுக்குலமும் மரணத்தைக் குறித்த பயத்தோடுதான் வாழ்ந்து வந்தது. இயேசுவின் சிலுவை மரணம் மனிதனின் பாவத்தின் மூலமாக மனிதன்மேல் வரவிருந்த கடவுளின் கோபத்தை மாற்றிப்போட்டது மட்டுமல்லாமல் சாத்தானின் வல்லமையை தோற்கடித்தது. தூய பவுலடியார் “கிறிஸ்து என் ஜீவன்; மரணம் என் ஆதாயம்” என்கிறார் (பிலி. 1:21). தொடக்கக்காலத் திருச்சபையின் பிரசங்கத்தின் சாராம்சமே இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்ததே. இயேசுவின் உயிர்த்தெழுதலே மனித வாழ்விற்கு உத்திரவாதம். அவர் உயிர்த்தெழுதலே கிறித்தவ நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையும், உறுதியுமாயிருக்கிறது. கிறித்து உயிர்த்தெழுந்தது போல நாமும் உயிரோடு எழப்போகிறோம் என பவுலடியார் தனது மடல்களின் மூலமாக கிறித்தவ நம்பிக்கையாளர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறார். “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்” (1கொரி. 15:51,52) என்கிறார் பவுலடியார். இயேசு மறுபடியும் வருவார் என்பதனை தொடக்ககாலக் கிறித்தவர்கள் நம்பினார்கள் எருசலேம் சபை கிறித்தவ நம்பிக்கையாளர்கள் இயேசு மிக விரைவில் திரும்ப வருவார் என நம்பியதால் தங்களது சொத்துக்களை தாராளமாய் செலவு செய்து மிக விரைவில் ஏழைகளானார்கள். இந்த ஏழைக் கிறித்தவர்களுக்கு உதவிடும்படியாக பவுலும் அவருடைய உடன் மறைப்பணியாளர்களும் எருசலேமிற்கு வெளியேயிருந்த பல சபைகளுக்குச் சென்று காணிக்கை சேகரித்து எருசலேம் ஏழைக்

கிறித்தவர்களுக்கு உதவினார்கள். புதிய ஏற்பாட்டில் 300 இடங்களில் இயேசு திரும்பவும் வரப்போகிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. (Menzies & Horton, 2015).

இயேசுவின் இரகசிய வருகைக்குப்பின் உலகத்தில் அந்திகிறிஸ்து மூலமாக பயங்கர உபத்திரவம் ஏற்படும் என தொடக்ககாலக் கிறித்தவர்கள் நம்பினார்கள் (மத். 24:21-29; தி.வெ. 3:10) கிறிஸ்துவின் ஸ்தானத்தில் அல்லது கிறிஸ்துவுக்கு பதிலாக செயல்படுபவன் அந்திகிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். அவன் தன்னை உண்மையான கிறிஸ்து என உரிமை பாராட்டுவான் (2தெச. 2:3-9). இறுதியில் அர்மெகெதோன் என்றும் இடத்தில் கிறிஸ்துவுக்கும் இவனுக்கும் இடையில் நடக்கும் யுத்தத்தில் கிறிஸ்துவினால் தோற்கடிக்கப்பட்டு அக்கினியும், கந்தகமும் என்கிற எரிநரகத்தில் தள்ளப்படுவான் (திவெ. 19:11-16).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இரண்டு பிரிவுகள் உண்டு. 1. இரகசிய வருகை, சபை எடுத்துக்கொள்ளப்படுதல் 2. பகிரங்க வருகை. இயேசு கிறிஸ்து வெளிப்படுதல் இரகசிய வருகை என்பது மத்திய ஆகாயத்தில் சபைக்காக கிறிஸ்து வருவதைக் குறிக்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடு எழுந்து மத்திய வானத்தில் இயேசுகிறிஸ்துவை சந்திப்பார்கள். உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமாகி இயேசு கிறிஸ்துவை மத்திய ஆகாயத்தில் சந்திப்பார்கள் (Zaharia, 2004).

## நியாயத் தீர்ப்பு

ஒவ்வொரு தனிமனிதன் வாழ்க்கையிலும் அவன் செய்யும் நன்மை, தீமைக்குத்தக்க கடவுள் சரியான பலனைக் கொடுப்பார். எனவே நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்வைப் பற்றி சிந்திக்க வேண்டும். கடவுள் நல்லவர். அவருடைய நன்மை, அவருடைய நீதி, அன்பு, இரக்கம், பட்சம், பரிசுத்தம் ஆகியவற்றில் அடங்கியுள்ளது (சங். 103:10-11). கடவுளுடைய நன்மை என்பது நமக்கு அவர் கொடுக்கும் மகிழ்ச்சி, சமாதானம், ஆசீர்வாதமாகும். அதே வேளையில் நமது வாழ்க்கையில் நல்ல குணங்களை உண்டாக்க அவர் பாடுகளையும், துன்பங்களையும் அனுமதிக்கிறார் (1பேதுரு 5:10).

## இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பு

உரோ. 9:6ன் படி உபத்திரவக் காலத்தில் இவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (மத். 24,25 அதிகாரங்கள்). கிறிஸ்துவின் பகிரங்க வருகையில் அவருடன் சேர்க்கப்படுவார்கள். உண்மையான இஸ்ரவேலர் 1000 வருட அரசாட்சியில் பங்கு பெறுவார்கள்.

## யூதரல்லாத பிற இனத்தவர் நியாயந் தீர்க்கப்படல்

மத். 25:31-36ன் படி இஸ்ரவேலருக்கு ஆதரவாக இருந்தவர்கள், 1000 வருட அரசாட்சியில் பங்கு பெறுவார்கள். இஸ்ரவேலரைத் துன்பப்படுத்தியவர்கள் கிறிஸ்துவின் பகிரங்க வருகையில் அழிக்கப்படுவார்கள்.

## புதிய வானம் புதிய பூமி

1000 வருட முடிவில் சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டு பின்பு அவனால் ஏற்படும் கலகம் அடக்கப்படும். ஆண்டவர் பழைய பூமியை அக்கினியால் அழிப்பார். துன்மார்க்கரை அக்கினிக்கடலிலே போடுவார். பழைய வானமும் பழைய பூமியும் அகன்றுபோம் (2பேது. 3:10,11). புதிய வானமும், புதிய பூமியும் உண்டாக்கப்படும் (எசா. 65:17; 66:22; 2பேது. 3:13; தி.வெ. 21:1). புதிய எருசலேம் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு இறங்கும். தூய மனிதர்கள் புதிய எருசலேமில் நித்தியமாக வாசம் பண்ணுவார்கள். நித்திய பட்டணத்தின் வாழ்க்கை பற்றி விவிலியத்தில் விபரமாய் கூறப்பட்டுள்ளது (தி.வெ. 22ம் அதிகாரம்).

## முடிவுரை

கிறித்தவம் யூத சமயத்தினின்று உதித்த ஒரு பெருஞ் சமயமாகும். இச்சமயத்தை பின்பற்றின தொடக்ககால கிறித்தவர்கள் பல சமூக அமைப்பைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் தங்களுடைய வாழ்வில் நம்பக்கூடிய நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே தங்கள் வாழ்வை நடத்திச் சென்றனர். இவை பெரும்பாலும் சமயத் தொடர்புடையவையே. சமயத்தை மையமிட்டே இந்நம்பிக்கைகள் அனைத்தும் கடவுளால் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

## References

Aruldoss, D., (1998) The Life and Doctrines of Saint Paul, Tamil Theological Books Society, Arasaradi, Madurai, Tamil Nadu, India.

Douglas Alban, (2014) One Hundred Bible Lessons, Volume 1, ELS Publication, Chennai, Tamil Nadu, India.

Gandhi, K., (2008) Tamilar Palakka Valangalum Nambikkaiyum, World Studies Tamil Research Center, Chennai, Tamil Nadu India.

Menzies, W.W., Horton, S.M., (1984) Bible Doctrines: A Pentecostal Perspective, Logion Press, Springfield, USA.

Zaharia poonan, (1991) A Good Foundation, Bangalore, India.

Zaharia, S., (2004) Bible Teachings: A Pentecostal Overview, CB 2000 Publications, Madurai, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License